சபை அலுவல்கள்

திகதி : 2008-07-22

கௌரவ ஹஸன் அலி கௌரவ சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

சட்டமூலங்களின் சமர்ப்பணம்:

"நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகார சபை" எனும் தலைப்புடைய சட்டமூலம்

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்புடைய தேசியக் கொள்கையினை உருவாக்குவதற்கும் அவ்வாறான கொள்கை அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், வசதிகளற்ற நகரக் குடியேற்றங்களில் வாழும் நபர்களின் வாழ்க்கை நிலையினை கிடைக்கக்கூடியதாகவுள்ள வீட்டுத் தொகுதிகளை முன்னேற்றுவதன் மூலம் அல்லது நிலைபேறான நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதற்காக சிறந்த வீடமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலமும் ஆகக்குறைந்த நகர சேவைகளைப் பெற்றுக்கொள்ளச் செய்வதன் மூலமும் முன்னேற்றுவதற்கும் மேலும் அதனுடன் தொடர்புடைய மற்றும் இடைநேர்விளைவான ஏற்பாடுகளை வழங்குவதற்கும் நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி அதிகாரசபையினை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கான சட்டமூலத்தினை நகர அபிவிருத்தி புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்:

பின்வரும் விடயங்கள் சபையினால் நிறைவேற்றப்பட்டன.

(i) குறைநிரப்புத் தொகை - தலைப்பு 112

(ii) கொன்சுலர் சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் பற்றிய 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கொன்சுலர் செயற்பாடுகள் சட்டத்தின் கீழான அறிவித்தல்.

ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை:

"மடு தேவாலய சமய நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்தல்" பற்றிய ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை கௌரவ ஜயலத் ஜயவர்தன அவர்களினால் பிரேரிக்கப்பட்டது.

அதன்பிறகு, பி.ப. 4.27 மணிக்கு 2008 யூலை 23 புதன்கிழமை மு. 9.30 வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

* இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.